செ.வெ.எண்.354/2009/செமதொஅ நாள்: 19.10.2009

**காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 19,241 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தெரிவித்தார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீரப்பாக்கம், கொளத்தூர் ஆகிய ஊராட்சிகளில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழாவும், நந்திவரம் பேரூராட்சியில் உள்ள அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழாவும் நடைபெற்றன. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு கீரப்பாக்கம் ஊராட்சியில் 700 குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், கொளத்தூர் ஊராட்சியில் 656 குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், நந்திரவரம் பேரூராட்சியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு 987 இலவச மிதிவண்டிகளும், சிங்கப்பெருமாள் கோயில் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ-மாணவிகளுக்கு 310 இலவச மிதிவண்டிகளையும் வழங்கி பேசியதாவது,

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு முன்பு, ஆட்சிக்கு வந்தால் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவோம் என தெரிவித்தார். அதன்படி தமிழகம் முழுவதும் குடும்ப அட்டை வைத்துள்ள அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை தமிழகம் முழுவதும் ரூ. 2267 கோடியே 87 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 80 லட்சத்து 15 ஆயிரத்து 321 குடும்பங்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 30 லட்சத்து 13 ஆயிரத்து 348 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 39 ஊராட்சிகள் உள்ளன. அதில் 29 ஊராட்சிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஊராட்சிக்கு இன்னும் 3 மாதத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை 19 ஆயிரத்து 241 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. சொல்லாத திட்டங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார். இந்த பகுதியில் பட்டா மற்றும் சாலை வசதி செய்து தர வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்கள். விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். சாலை பணிகள் குறித்து வனத்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரிடம் பேசப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இதுபோன்று 4 இடங்களில் பிரச்சனைகள் உள்ளன. அந்த பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்படும். நபார்டு திட்டத்தில் கண்டிகையிலிருந்து கல்வாய் சாலை 32 இலட்சத்தில் புதியதாக போடப்பட்டது. இருவழிச்சாலையில் இருந்த வண்டலூர்-கேளம்பாக்கம் சாலை தற்போது 4 வழிச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 7.5 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 45 ஆயிரம் குடும்பங்களுக்கு 700 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்து 1 கோடி குடும்பங்களுக்கு ரூ.1 லட்சம் வரை சிகிச்சை பெற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அனைத்து பகுதிகளிலும் அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தில் சேர்ந்து அடையாள அட்டை பெற்று 51 விதமான சிகிச்சைகளுக்கு ரூ.1 லட்சம் வரை சிகிச்சைப் பெற்று பயன்பெறலாம். அதற்கான பிரிமிய தொகையை ரூ.570 கோடியை அரசே செலுத்தியுள்ளது. நாட்டில் உள்ள ஏழை-எளிய மக்கள் அனைத்து வசதிகளும் பெற்று வாழ வேண்டும் என்று அயராது பாடுபட்டு வருகிறார் டாக்டர் கலைஞர் அவர்கள். படிக்காத ஏழை – எளிய மக்கள் உலகச் செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்படுகிறது. இவற்றை நல்லமுறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இந்த கொளத்தூர் ஊராட்சியில் பட்டா, சாலை வசதிகள் போன்ற கோரிக்கைகள் விரைவில் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கீரப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.பி.ராஜேந்திரன், கொளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.கி.சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.து.மூர்த்தி ஆகியோர் முன்னிலையுரையாற்றினார்கள். விழாவிற்கு செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் செல்வி.பத்மாஜா தேவி தலைமை தாங்கினார். முடிவில் கீரப்பாக்கம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு.இந்திரா தனபால், கொளத்தூர் ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு.ஏழுமலை ஆகியோர் நன்றி கூறினார்கள். விழாவில் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.இ.ஏ.வாசு, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சித் தலைவர் திரு.எம்.கே.தண்டபாணி, துணைத் தலைவர் திரு.கே.பி.ஜார்ஜ், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.டி.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.ஜெ.ஆறுமுகம், திருமதி.மணிமேகலை விஜயன், கீரப்பாக்கம் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.கே.ஹேமாவதி கன்னியப்பன், கொளத்தூர் ஊராட்சிக்குழு உறுப்பினர் திரு.மணிமேகலை சீனிவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.அ.அம்ஜத்துல் ஹசன், திருமதி.எஸ்.சர்தாஜ் பேகம், செங்கல்பட்டு வட்டாட்சியர் திரு.ஜி.கிளாரன்ஸ், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், பள்ளி ஆசிரிய பெருமக்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.